முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1075

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.09.2022, வியாழக்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கனே
   பிரணவ சித்திமிகு தேசிகனே
   சரவணச் சுடரேற்றி உலகை காக்கும்
   சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 23 நாள், 08.09.2022 வியாழக்கிழமை)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகத்தார் ஞான வழிவர
3. முருகப்பெருமான் என் அருள் பெறுவதோடு
   முழுமைஞானம் பெற்று சிறக்க நேரும்
   நேர்மை கொண்டு அரங்கன் தர்மத்தை
   நிலவுலகோர் முன்மொழிந்து ஏற்று வர
4. வறுமை விலகும் உலகம் பலம்பெறும்
   வல்லமைபட ஞான பலம் கூடி
   உயர்வான ஞானவான்கள் ஆட்சியாக
   வையகம் கண்டு ஞான ஆட்சிபெறும்
5. ஆகவே அரங்கன் காட்டும்
   அறநெறியாம் அற்புதமான ஞானநெறி
   மறுமைவெல்லும் மா தர்மநெறி
   மகத்துவமிக்க சன்மார்க்க நெறி
6. நெறிதனை உலகமக்கள் ஏற்றால் போதும்
   நிலவுலகம் ஆற்றல் பெருகி
   வறுமை பிறபேரிடர் துன்பமில்லாத
   வல்லமையான பாதுகாப்புமிக்க பூமியாக மாறி
7. மாறியே இந்த உலகம் அற்புதம் பெறும்
   மகத்துவம்பட அரங்கனால் பாதுகாப்பு மிக்க ஞானபூமியாக
   வையகம் மேல்நிலை கண்டு
   கலியுகம் என்ற நிலையை
8. ஞானயுகமாக மாற்றம் கண்டு
   அரங்கனால் அற்புதத்தைக் காணும்
   ஆகவே அரங்கனுள் என் சக்தி ஆற்றலாய் இருக்க
   அணுகி உலகோர் அரங்கன் குடில் நோக்கி வர

9. வரமென உலகோர்க்கு அழியாமை என்கின்ற
வல்லமையான சக்தி சடுதி கிட்டி
உலகோரெல்லாம் ஞானிகளாகி
உயர் ஞானம் பெறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–